திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நமது மாநிலத்தில் 1—4—1972 முடிய வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து கொண்டிருக்கும் சட்டக் கல்விப் பட்டதாரிகள் எத்தனை பேர்? அவர்கள் எந்தெந்தப் பணிகளுக்காகப் பதிவு செய்துகொண்டுள்ளனர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நமது மாநிலத்தில் உள்ள வேலைவாய்ப் பகங்களில் 1—4—1972 வரையில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ள சட்டம் பயின்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை 101 ஆகும். அவர்கள் பதிவு செய்துகொண்டுள்ள வேலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. பொது (பட்டதாரிகள்—கலை)—77
2. பொது (பட்டதாரிகள்—அறிவியல்)—8
3. பொது (பட்டதாரிகள்—வணிகவியல்)—4
4. சட்ட உதவியாளர்கள்—9
5. தொழிலாளர் நல அதிகாரி—3.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்தச் சட்டக் கல்வி பட்ட தாரிகள் பதிவு செய்து கொண்டவர்கள் 1970, 1971, 1972 ஆகிய ஆண்டுகளில் கூடுதலாகியிருக்கிறார்களா, குறைவாக ஆகியிருக்கிறார்களாவென்று அறிய விரும்புகிறேன். வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து கொண்டு வந்தவர்கள் எண்ணிக்கை அதிகப்பட்டு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, வேலையில்லாத் திண் டாட்டம் அதிகரித்துக்கொண்டு தான் இருக்கிறது. சட்டக் கல்லூரியிலும் அதிகமான மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு முன்வருகிறார்கள். இங்கே நம் எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சிலே பதிவு செய்கிறவர்களைப் பொறுத்த அள விற்கு, 1969-70-ல் 73-ம், 1971-72-ல் 99-ம் என்று இருக்கிறது. இந்தத் துறையில் அதிகப்பட்டிருக்கிற நிலைதான் இருக்கிறது.

Indo-Italian Foot-wear Company.

* 13 *Q*.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Indo-Italian Foot-wear Company in the State is to be wound up;

(*b*) if so, the reasons therefor;

(*c*) whether any financial assistance has been given to the above Company by the State-owned financial bodies; and

(*d*) if so, the details thereof ?

இந்திய-இத்தாலிய மிதியடி தயாரிப்பு நிறுவனம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநிலத்தில் உள்ள இந்திய-இத்தாலிய மிதியடி தயாரிப்பு நிறுவனம் மூடப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) மேற்சொன்ன நிறுவனத்திற்கு மாநில நிதி வழங்கு அமைப்புகள் நிதி உதவி அளித்துள்ளனவா ?

(எ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை. அந்தக் கம்பெனி தற்காலிக மாக மூடப்பட்டுள்ளது.

(இ) வினாவுக்கு இடமில்லை.

(உ) இல்லை.

(எ) வினாவுக்கு இடமில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, மீண்டும் இந்த நிறுவனம் திறக்கப்படுமா, எப்போது திறக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழகத்தில் இருந்த இந்தத் தொழிற் சாலை பல இடையூறுகளாலும், விலையை நிர்ணயிப்பதிலும், 'கொலாபரேஷன்' பெறுவதிலும் சில கஷ்டங்கள் ஏற்பட்டதாலும், மூடப்பட்டதாகத் தகவல் வந் திருக்கிறது.

Court-fee Stamps

* 14 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the public are unable to get from the Stamp Vendors, Court-fee Stamps of the denomination they require ;

(*b*) if so, the reason for such scarcity ; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter ?